# தேச பக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்
RNI.No.TNTAM/2022/86012
ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779
★மலர்:05 ★இதழ்:134 ★14.09.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை
★Volume:05 ★Issue:134 ★14.09.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai






## ஆரணியில் விநாயகர் சிலை தயாரிப்பு தொழில் கடும் பாதிப்பு:
# கட்டுப்பாடுகள், மூலப்பொருள் விலை உயர்வால் தொழிலாளர்கள் தவிப்பு
### தமிழக அரசு நடவடிக்கை எடுக்க கோரிக்கை

ஆரணி, செப். 14

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பாரம்பரியமாக நடைபெற்று வரும் விநாயகர் சிலை தயாரிக்கும் தொழில், பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

ஆரணியில் ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 1 அடி முதல் 15 அடி உயரம் வரை பல்வேறு அளவுகளில் விநாயகர் சிலைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவது வழக்கம். இதற்காக பல மாதங்களுக்கு முன்பே சிலைகளுக்கான முன்பதிவு நடைபெறும். பொதுமக்கள் முன்பணம் செலுத்தி தங்களுக்கு தேவையான சிலைகளை முன்பதிவு செய்வார்கள்.

இந்த நிலையில், இந்த ஆண்டு விநாயகர் சிலைகள் 10 அடி உயரத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும், நீர்நிலைகளில் கரைக்கப்படும் சிலைகள் விரைவாக கரையக்கூடிய களி மண், காகிதக் கூழ், கிழங்கு மாவு உள்ளிட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களால் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், பல ஆண்டுகளாக விநாயகர் சிலை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இதுகுறித்து ஆரணியைச் சேர்ந்த விநாயகர் சிலை தயாரிப்பு வியாபாரி சிவஞானம் உடையார் கூறியதாவது:

விநாயகர் சிலைகள் தயாரிப்பதற்கான ரசாயனப் பொருட்கள் மற்றும் இதர மூலப்பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதிக விலை கொடுத்து மூலப்பொருட்களை வாங்கி சிலைகள் தயாரித்து விற்பனை செய்வது தற்போது மிகவும் சிரமமாக உள்ளது.

வடமாநிலங்களில் இருந்து வரும் சிலர் முதலில் சிறிய அளவிலான சிலைகளை தயாரித்து விற்பனை செய்ய தொடங்குகின்றனர். பின்னர், பல்வேறு ரசாயனப்பொருட்களைப் பயன்படுத்தி பெரிய சிலைகளை தயாரித்து, கவர்ச்சிகரமான அலங்காரங்களுடன்விற்பனை செய்கின்றனர். இது போன்ற சிலைகளை பொதுமக்கள் அதிகம் விரும்பி வாங்குகின்றனர்.

ஆனால், நாங்கள் தயாரிக்கும் சிலைகள் களி மண், காகிதக் கூழ், கிழங்கு மாவு உள்ளிட்ட நீரில் விரைவாக கரையக்கூடிய பொருட்களை பயன்படுத்தியே தயாரிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழலுக்கும், நீர்நிலைகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சிலைகளை தயாரித்து வருகிறோம்.

விநாயகர் சிலைகளின் உயரம் மற்றும் பயன்படுத்தவேண்டியபொருட்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் குறித்து அரசு அதிகாரிகள் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு முன்போ அல்லது ஒரு வருடத்திற்கு முன்போ தகவல் தெரிவித்தால், அதற்கேற்ப சிலைகளை தயாரித்து விற்பனை செய்ய முடியும்.

ஆனால், விநாயகர் சதுர்த்திக்கு சில நாட்களுக்கு முன்புதான் புதிய கட்டுப்பாடுகள் குறித்து தகவல் தெரிவிக்கப்படுவதால், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சிலைகளை என்ன செய்வது என்பது தெரியாமல் தவிக்கிறோம். இதனால் தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.

வழக்கமாக விநாயகர் சதுர்த்திக்கு 3 மாதங்களுக்கு முன்பே பொது மக்கள் சிலைகளை முன்பதிவு செய்து முன்பணம் செலுத்துவார்கள். இந்த ஆண்டு முன்பதிவும், முன்பணமும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் சிலை விற்பனையும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆரணியில் ரூ.100 முதல் ரூ.20 ஆயிரம் வரை பல்வேறு விலைகளில் விநாயகர் சிலைகள் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது விற்பனை குறைந்துள்ளதால், சிலை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆரணி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மண்பாண்டத் தொழில் பரவலாக நடைபெற்று வருகிறது. ஏரிகளில் இருந்து மண் எடுப்பதற்கான கட்டுப்பாடுகள், மூலப்பொருட்களின் விலை உயர்வு, விநாயகர் சிலைகள் தயாரிப்பதற்கான விதிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மண்பாண்டம் மற்றும் விநாயகர் சிலைதயாரிப்புதொழில்கள் நலிவடைந்து வருகின்றன.

விநாயகர் சதுர்த்தி நெருங்கியுள்ள நிலையில், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாக்கும் வகையில் சிலைகள் தயாரிப்பதை ஊக்குவிப்பதுடன், பாரம்பரியமாக இந்த தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் வழிகாட்டுதல்களை முன் கூட்டியே வழங்க வேண்டும். மேலும், தொழில் பாதிக்கப்படாத வகையில் உரிய தீர்வு காண வேண்டும் என்று தொழிலாளர்கள் சார்பில் வலியுறுத்தப்படுகிறது.

# விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலாகல கொண்டாட்டம்
## தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீஸார் பாதுகாப்பு

: விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பந்தல்களில் 37 ஆயிரம் விநாயகர் சிலைகளை வைத்து பூஜை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலா கலமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பாஜக, இந்து முன்னணி உள்ளிட்ட பல்வேறு இந்து அமைப்புகள், இளைஞர் அமைப்பினர், குடியிருப்பு வாசிகள் என பல்வேறு தரப்பினரும் ஆங்காங்கே பந்தல் அமைத்து பிரம்மாண்ட விநாயகர் சிலைகளை வைத்து வழிபட போலீஸாரிடம் அனுமதி கோரியிருந்தனர். இதைத் தொடர்ந்து, சென்னையில் 1,562 சிலைகள் உட்பட தமிழகம் முழுவதும் சுமார் 37 ஆயிரம் சிலைகளை வைத்து வழிபட போலீஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி, உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படியும், மாசுக் கட்டுப்பாட்டுவாரியத்தின்அறிவுறுத்தல்படியும், தீயணைப்புத் துறை, மாநகராட்சியின் தடை யில்லா சான்றிதழுடனும் விநாயகர் சிலைகள் நிறுவி, வழிபாடுகள் செய்யவும், பின்னர் அவற்றை பாதுகாப்பான முறையில் நீர்நிலைகளில் கரைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



சிலையின் உயரம் 10 அடிக்கு மேல் இருக்கக்கூடாது. பிற வழிபாட்டுத்தலங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் ஆகிய வற்றின் அருகில் சிலை அமைப்பதை தவிர்க்க வேண்டும். மத வெறுப்பைத் தூண்டும் வகையிலோ, பிற மதத்தினரின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலோ கோஷமிடக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விநாயகர் சதுர்த்தி விழா இன்று கொண்டாடப் படும் நிலையில், பெரும்பாலும் அனைத்து இடங்களிலும் நேற்று மாலையே பந்தல்களில் சிலைகள் அமைக்கப்பட்டன. அனைத்து பந்தல்களிலும் தலா ஒரு காவலர், 2 தன்னார்வலர்கள் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். சிசிடிவி கேமராக்களும் பொருத்தி, கண்காணிக்கப்படுகிறது. இந்த சிலைகளுக்கு இன்று முதல் பூஜைகள் செய்யப்பட்டு 19, 20ம் தேதிகளில் (சனி, ஞாயிறு) ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நீர்நிலைகளில் கரைக்கப்பட உள்ளது.

விநாயகர் சதுர்த்தி பாதுகாப்பு பணியில் சென்னையில் மட்டும் 16 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். உளவுப்பிரிவு போலீஸார்ரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்து முன்னணி மாநில செய்தித் தொடர்பாளர் இளங்கோவன் கூறும்போது, "தமிழகம் முழு வதும் இந்து முன்னணி சார்பில் பெரிய மற்றும் சிறிய அளவிலான சிலைகள் என மொத்தம் 1.39 லட்சம் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. சென்னையில் 5,501 சிலைகள் வைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெறும்.

சென்னையில் இந்து முன்னணி சார்பில் 20ம் தேதி ஊர்வலம் நடைபெறும். தென் சென்னை பகுதியில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் வள்ளுவர் கோட்டத்தில் இருந்தும், மத்திய சென்னையில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் திருவல்லிக்கேணியில் இருந்தும், வட சென்னை பகுதியில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் முத்துசாமி பாலத்தில் இருந்தும் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு கடலில் கரைக்கப்படும்" என்றார்.




## திருமுல்லைவாயல் மகளிர் சிட்கோ (SIDCO) தொழில் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

செங்குன்றம், செப்டம்பர் 14:

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் அடுத்த திருமுல்லைவாயல் மகளிர் சிட்கோ (SIDCO) தொழில் உற்பத்தியாளர்கள் சங்கம் (TWSIMA) தலைவர் தேவி மீனாதலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட உரிமையாளர்கள் காட்டூர் மின்சார வாரிய அலுவலகத்தை தொழிற்பேட்டையில் அடிக்கடி ஏற்படும் மின் வெட்டுப் பிரச்னைகள் தொடர்பாக முற்றுகையிட்டு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மகளிர் சிட்கோ தொழிற்பேட்டை உரிமையாளர்கள், மின்சார வாரியத்திற்கு எதிரான அமைதியான போராட்டத்தை மேற்கொண்டு உதவி செயற்பொறியாளரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

மனுவைப் பெற்றுக் கொண்ட உதவி செயற்பொறியாளர் 16 MVA மின்மாற்றியை 10 முதல் 15 நாள்களுக்கு அமைத்து தருவதாகவும், இதனால் மின்தடை வெகுவாக குறைவதோடு, மின்சப்ளையும் தொடர்ச்சியாக உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும் என்றார். மகளிர் உற்பத்தியாளர்களிடம், சிட்கோ வளாகத்திலேயே 16 MVA மின்மாற்றி அமைப்பதற்காக இடத்தை ஒதுக்கி கொடுத்தால் மின்சப்ளை வேகமாக கிடைக்கும் என்றார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த திருமுல்லைவாயல் மகளிர் சிட்கோ (SIDCO) தொழில் உற்பத்தியாளர்கள் சங்கம் (TWSIMA) தலைவர் தேவி மீனா, இது போன்ற மின்சார தடையினால் அதிக அளவில் இயந்திரங்கள் பழுதடைவதாகவும் குறித்த நேரத்தில் உற்பத்தி பொருட்களை டெலிவரி செய்ய முடிவதில்லை என்றும் பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கும் விதத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் தொடங்கப்பட்ட இந்த தொழிற்பேட்டையில் கடந்த மூன்று ஆண்டுகளாக மின்சாரம் சரியாக வழங்கப்படாததால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதாகவும் கூடிய விரைவில் அவை சரி செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். சங்க செயலாளர் வளர்மதி மணிகண்டன், பொருளாளர் ரேகா ஆனந்த், இணைச் செயலாளர் சஜிகுமார், முன்னாள் தலைவர் கிரி, ஆலோசகர் ரமேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## முன்னாள் முதல்வர் ஸ்டாலினை கொச்சைப்படுத்தியதாக முதலமைச்சர் ஜோசப் விஜய் கண்டித்து திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

முன்னாள் முதல்வர் ஸ்டாலினை கொச்சைப்படுத்தியதாக முதலமைச்சர் ஜோசப் விஜய் கண்டித்து திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இராணிப்பேட்டை மாவட்டம் முத்துகடை பேருந்து நிலையம் அருகே மாவட்ட செயலாளர் காந்தி தலைமையில் நேற்று தமிழக முதல்வரை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது அப்போது மாவட்ட செயலாளர் பேசும்போது தமிழக சட்டசபையில்முதல்வர்ஜோசப் விஜய் பொதுமக்கள் பிரச்னைகள், நிர்வாக தோல்விகள் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளையும் திசைதிருப்பச் சட்டமன்றத்தை டயலாக் பேசும் தளமாக மாற்றிவிட்டதாகக் குற்றம் சாட்டினார் மேலும், அவையின் மாண்பைக் குலைக்கும் வகையில் முதலமைச்சர் கொச்சையாகப் பேசுவதாகவும் பல்வேறு விவகாரங்களுக்கு உரிய விளக்கம் அளிக்காமல் தரம் தாழ்ந்து பேசி வருகிறார் மேலும் விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பில் தமிழக முதல்வர் இருக்கிறார். ஆனால், அதற்குப் பதில் அளிப்பதைத் தவிர்த்து தரம் தாழ்ந்த அரசியல் பேச்சுக்களை முன் வைப்பது எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவே ஆட்சியின் தோல்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தப்பிக்கத் தரக்குறைவான பேச்சுக்களைப் பேசும் தரமற்ற மனிதராக முதல்வர் ஜோசப் விஜய் மாறியுள்ளதைக் கண்டிக்கிறோம் எனவும் இவர் ரியல் முதல்வராக இல்லாமல் ரீல்ஸ் முதல்வராக உள்ளார் எனகூறினார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகரப் பேரூர் கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள் மற்றும்கிளைக்கழகநிர்வாகிகள்உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.






## கொசப்பூர் எலைட் குளோபல் பள்ளியில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்

செங்குன்றம், செப்டம்பர் 14:

சென்னை மாதவரம் அடுத்த கொசப்பூரில் அமைந்துள்ள எலைட் குளோபல் பள்ளி, ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்சிட்டி மருத்துவமனை, சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம் ஆகியோர் இணைந்து பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரிய ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு மாபெரும் இலவச இருதயம், கண், பல், காது மூக்கு தொண்டை மற்றும் பொது மருத்துவம் முகாம் எலைட் குளோபல் பள்ளி தாளாளர் ஒய். முஹம்மது ஷிபின், நஸ் ரீன் ஷிபின் ஆகியோர் தலைமையில் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. பள்ளி துணை முதல்வர் கே.எம். ரஹ்மத் துல்லா அனைவரையும் வரவேற்றார். இதில் சென்னை சோசியல் லயன்ஸ் சங்கத் தலைவர் எஸ்.ரமேஷ், செயலாளர் எஸ்.கோபி, மாவட்டத் தலைவர் நண்பன் எம்.முகம்மது அபுபக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இம்மருத்துவ முகாமில் 125க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கும், 50க்கும் மேற்பட்ட ஆசிரிய ஆசிரியைகளுக்கும், ஊழியர்களுக்கும் இலவசமாக சர்க்கரை, இருதயம், கண், பல், காது மூக்கு தொண்டை பரிசோதனையும், பொது மருத்துவமும், ஈசிஜி மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ ஆலோசனையும் மருந்து மாத்திரைகளும் வழங்கப்பட்டது.

இதில் மாணவிகள், ஆசிரியஆசிரியைகள், பள்ளி ஊழியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# செங்குன்றம் லயன்ஸ் சங்கம் சார்பில் 50 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது

செங்குன்றம், செப்டம்பர் 14:

சென்னை செங்குன்றம் லயன்ஸ்சங்கம்சார்பில்49 ஆம் ஆண்டில் 50 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கும் நிகழ்ச்சி இரண்டாம் துணை ஆளுநர் எஸ்.பாலசுப்பிரமணியன், முன்னாள் ஆளுநர்கள் டி.துளசிங்கம், பி.வி. ரவீந்திரன், மாவட்டப் பொருளாளர் கே.சுதாகர், தலைவர்களின் ஒருங்கிணைப்பாளர் டி.ரமேஷ், மாவட்டத் தலைவர்கள் பி.பி.சுகுமார், பி.கோதண்டபாணி, என்.சந்திரசேகர், ஜெ.ராஜ், ஆர்.செல்வக்குமார், ஜி.சீனிவாசன், பி.



சங்கத் தலைவர் பி.நந்தகுமார், செயலாளர் கே.இளங்கோவன், பொருளாளர் ஜி.பிரபு ஆகியோர் ஏற்பாட்டில் செங்குன்றம் லயன்ஸ் சங்க சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது.

மாவட்ட முன்னாள் ஆளுநர் எஸ்.நகின்நல்லாசிரியர் விருது வழங்கி சிறப்புரையாற்றினார். துணைப் பொருளாளர் கே.சந்திரசேகர், ஆளுநர் தனி செயலர் எம்.வி. லவகுமார், மண்டலத் தலைவர் டி.சீனிவாசன், வட்டாரத் தலைவர் டி. பவானிசங்கர், மாவட்டத் தலைவர் இரா.ஏ.பாபு, மாவட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஆர்.முனுசாமி, மாவட்டத் தலைவர்கள் டி.கோபி, வட்டாரத் ராதாகிருஷ்ணன், எம். பொன்னையன் உள்ளிட்ட லயன்ஸ் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் அரசு மற்றும் தனியார் பள்ளி ஆசிரிய ஆசிரியைகள் 50 பேருக்கு நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



திண்டுக்கல்மாவட்டகாவல்கண்காணிப்பாளர்அலுவலகத்தில்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையில் விநாயகர்சதுர்த்தி விழாவை முன்னிட்டு மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.



### திருவண்ணாமலை ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு:

# GPS இல்லாத கனிம வாகனங்களுக்கு அக்டோபர் 1 முதல் அனுமதி இல்லை

## 30ம் தேதிக்குள் GPS பொருத்த வேண்டும்

திருவண்ணாமலை, செப்.14

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் குவாரிகள் மற்றும் கிரஷர்களில் இருந்து கனிமங்களை எடுத்துச் செல்லும் அனைத்து வாகனங்களிலும் AIS 140 அல்லது அதற்கு மேற்பட்ட தரநிலை கொண்ட GPS கருவியை பொருத்தி, MiMaS Portal2 உடன் இணைப்பதற்கான காலஅவகாசம்செப்டம்பர்30ம்தேதிவரைநீட்டிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார். திருவண்ணாமலைமாவட்டத்தில்குவாரிகள் மற்றும் கிரஷர்களில் இருந்து கனிமங்களை எடுத்துச் செல்லும் வாகனங்களில் AIS 140 (Automotive Industry Standard No.140) அல்லது அதற்கு மேற்பட்ட தரநிலை கொண்ட GPS கருவியை பொருத்தி, MiMaS Portal2 உடன் இணைக்க ஏற்கனவே ஆகஸ்ட் 31ம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாவட்டத்தில் இதுவரை 8,418 வாகனங்கள் MiMaS Portalல் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் 865 வாகனங்களுக்கு மட்டுமே GPS கருவி பொருத்தப்பட்டு MiMaS Portal உடன் இணைக்கப்பட்டுள்ளது. இது பதிவு செய்யப்பட்ட மொத்த வாகனங்களில் சுமார் 10 சதவீதம் மட்டுமே ஆகும். இதையடுத்து, கனிமங்களை எடுத்துச் செல்லும் அனைத்து வாகனங்களிலும் வருகிற செப்டம்பர் 30ம் தேதிக்குள் GPS கருவியை பொருத்தி, அவற்றை MiMaS Portalஉடன் இணைத்து பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அக்டோபர் 1 முதல் கட்டுப்பாடு

செப்டம்பர் 30ம் தேதிக்குள் GPS கருவி பொருத்தி, MiMaS Portalல் பதிவு செய்யப்பட்டு இணைக்கப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே அக்டோபர் 1ம் தேதி முதல் கனிமங்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும். GPS கருவி பொருத்தப்படாத மற்றும் MiMaS Portalல் பதிவு செய்யப்படாத வாகனங்களில் கனிமங்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள், லாரி உரிமையாளர்கள் மற்றும் கனிமங்களை எடுத்துச் செல்லும் வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனங்களில் செப்டம்பர் 30ம் தேதிக்குள் GPS கருவியை பொருத்தி, MiMaS Portalல் பதிவு செய்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# சீறிப்பாய்ந்த 300க்கும் மேற்பட்ட காளைகள்; மேல்பாலூரில் களைகட்டிய கன்று விடும் திருவிழா

## அக்ரி கிருஷ்ணமூர்த்தி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை, செப்.14

கலசப்பாக்கம் அடுத்த மேல்பாலூர் அம்பேத்கர் நகர் பகுதியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு கன்றுவிடும்திருவிழாவில் 300க்கும் மேற்பட்ட கன்றுகள் பங்கேற்று சீறிப்பாய்ந்தன. இதனை காண சுற்றுவட்டார பகுதிகள் மட்டுமின்றி திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பூர், வாணியம்பாடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட கன்றுகள் அழைத்து வரப்பட்டன. அவை அலங்கரிக்கப்பட்டு விழா நடைபெறும் பகுதியில் இருந்து விடப்பட்டபோது, வீதிகளில் சீறிப்பாய்ந்து ஓடிய காட்சியை பொதுமக்களும் இளைஞர்களும் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.

கன்று விடும் போட்டியில் சிறப்பாக ஓடி வெற்றி பெற்ற கன்றுகளின் உரிமையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசாக எச்.டி. டீலக்ஸ் இருசக்கர வாகனமும், இரண்டாம் பரிசாக எக்ஸெல் இருசக்கர வாகனமும், மூன்றாம் மற்றும் நான்காம் பரிசுகளாக மின்சார ஸ்கூட்டிகளும் வழங்கப்பட்டன. இதுதவிரநூற்றுக்கும் மேற்பட்ட சிறப்பு பரி



இருந்தும் ஏராளமான இளைஞர்களும் பொது மக்களும் திரண்டதால் விழா களைகட்டியது.

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேல்பாலூர் அம்பேத்கர் நகர், சிங்கார கிராமத்தில் ஊர்பொதுமக்கள், விழா குழுவினர் மற்றும் இளைஞர்கள் இணைந்து முதலாம் ஆண்டு கன்று விடும் திருவிழாவை நடத்தினர்.

திருவிழாவில் திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, ஜோலார்பேட்டை, ஆம் திருவிழாவை காண சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமானஇளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் குவிந்தனர். காளைகள் குறைந்த நேரத்தில் இலக்கை அடைவதை காண இளைஞர்கள் ஆரவாரத்துடன் உற்சாகப்படுத்தினர். விழாவின் சிறப்பு அழைப்பாளராக கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான அதிமுக கொறடா அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி பங்கேற்று கொடியசைத்து கன்றுவிடும்திருவிழாவை தொடங்கி வைத்தார்.

சுகளும் வழங்கப்பட்டன.

விழாவையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கடலாடி காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும், அவசரகால மருத்துவ உதவிக்காக 108 மருத்துவக் குழுவினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

விழாவில் விழா குழுவினர், இளைஞர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த கன்றுகளின் உரிமையாளர்கள் என ஏராளமானோர்கலந்து கொண்டனர்.

### உலக நன்மை வேண்டி திருக்கேதாரத்தில் மகாபிஷேகம்:

# திருவண்ணாமலை சிவாச்சாரியார்கள் பங்கேற்ற 51வது சிவாலய கைங்கரியம்

திருவண்ணாமலை, செப்.14

உலக நன்மை, உலக மக்கள் நலன் மற்றும் ஆன்மிகவளம்வேண்டி, உத்தரகாண்ட் மாநிலம் ருத்ரப்ரயாக் மாவட்டத்தில் அமைந்துள்ள உலகப் பிரசித்தி பெற்ற திருக்கேதாரம் திருக்கோவிலில் 51வது சிவாலய கைங்கரியம் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கேதாரம் தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தின் ஏற்பாட்டில், பிரம்மலீன் சுவாமி தயானந்த சரஸ்வதி, பிரம்மலீன் சுமார் 11 சிவாச்சாரியார்கள் மற்றும் வேத பாராயணம் செய்பவர்கள் பங்கேற்றனர். செப்டம்பர் 7ம் தேதி சோமவாரத்தையொட்டி நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், வேத மந்திரங்கள் முழங்க ருத்ர பாராயணம் மற்றும் மகாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கேதாரநாதர் சன்னதியில் நடைபெற்ற சிறப்பு பூஜைகள் மற்றும் மகாபிஷேகத்தில் ஏராளமான பக்தர்கள் சிவஸ்ரீ பி.டி.ஆர். கோகுல் (எ) சேஷாத்திரி குருக்களுக்கு, அவருடைய சிவாலய சேவையைப் பாராட்டி "சிவாலய சேவா ரத்தனா" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அண்ணாமலைசிவம், டாக்டர் பி.டி.ஆர். சோனாத்திரிசிவம், சாய்அருண்சிவம், சங்கர்சிவம், சிவாசிவம், கிரி சிவம், வர்மா சர்மா, அய்யாசாமி சர்மா, பரணி சர்மா, அரிமணம் சுப்பிரமணியம் உள்



சுவாமி சதானந்த சரஸ்வதி, சுவாமி சாக்ஷாத் கிருதானந்த சரஸ்வதி மற்றும் பிரம்மச்சாரி ஆனந்த சைதன்யா ஆகியோரின் வழிகாட்டுதலுடன் இந்த ஆன்மிக நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவில் குருக்கள் இளவரசுபட்டம் சிவஸ்ரீ பி.டி.ஆர். கோகுல் குருக்கள் தலைமையில் கலந்துகொண்டுசுவாமி தரிசனம் செய்தனர். உலகநன்மை, இயற்கை வளம், மக்கள் நலன் மற்றும் அமைதி வேண்டி நடைபெற்ற


இந்த ஆன்மிக நிகழ்வு பக்தர்களிடையே சிறப்பான வரவேற்பை பெற்றது.

இந்த 51வது சிவாலய கைங்கரியத்தை முன்னின்று சிறப்பாக நடத்திய இளவரசு பட்டம் ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில் இருந்து இமயமலைப்பகுதியில்அமைந்துள்ள திருக்கேதாரத்திற்கு சென்று சிவ வழிபாடு மற்றும் வேத பாராயணத்துடன் மகாபிஷேகம் நடத்தப்பட்டிருப்பது, ஆன்மிக பக்தர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பாமகவில் இணைந்த எல்.சந்திரசேகரன்





செங்குன்றம், செப்டம்பர் 14:

பாட்டாளி மக்கள் கட்சி தர்மபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி தலைமையில் மாவட்ட செயலாளர் வி.எம். பிரகாஷ், வன்னியர் சங்க மாவட்டச் செயலாளர் பி. டில்லி நாயக்கர், மாவட்ட இளைஞர் அணிசெயலாளர்எஸ்.சுதாகர்ஆகியோர்முன்னிலையில் செங்குன்றம் அடுத்த அருமந்தையைச் சேர்ந்த எல்.சந்திரசேகரன் தாய் கழகமான பாமகவில் இணைந்தார்.

# தற்காலிக செவிலியர் பணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன்தகவல்

தேனி மாவட்ட நலச்சங்கம் சார்பில் காலியாக உள்ள தற்காலிக செவிலியர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.இது குறித்து தேனி மாவட்ட மரு.இரா.வைத்திநாதன்.இ.ஆ.ப., ஆட்சித்தலைவர் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அவர்கள் செய்திக் குறிப்பில் தேனி மாவட்ட நலச்சங்கத்தின் கீழ் செயல்படும் மருத்துவப் பிரிவுகளில் காலியாக உள்ள தற்காலிக செவிலியர் பணியிடங்களுக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பணியிடங்களுக்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் நிபந்தனைகள் குறித்த விவரங்கள் தேனி மாவட்டத்தின் இணையதளத்தில் https://theni.nic.in பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.எனவே இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினை முழுமையாகப் பார்வையிட்டு அதற்குரிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து வருகின்ற 25.09.2026குள்சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

### உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு

# "வாழ்க்கையை நேசிப்போம்... நம்பிக்கையுடன் முன்னேறுவோம்!"

## "LET US CELEBRATE LIFE - வாழ்க்கையை கொண்டாடுவோம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

செங்குன்றம், செப்டம்பர் 14:

ஷெல்டர் டிரஸ்ட் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு – திருவள்ளூர் இணைந்து செங்குன்றம் ஓஆர்ஜிஎன் அரசு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஷெல்டர் டிரஸ்ட் நிர்வாகி ஏ.டி. சாலமன்ராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்களுடன் கலந்து சிந்தனை மற்றும் வாழ்க்கையில் வரும் சவால்களை தைரியத்துடன் எதிர்கொள்வது குறித்து பயனுள்ள விழிப்புணர்வை வழங்கினார்.

நிகழ்ச்சியில் சுமார் 150









ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடையே வாழ்க்கையின் மதிப்பு, தன்னம்பிக்கை மற்றும் நேர்மறையான சிந்தனையை வளர்க்கும் நோக்கில், உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு "LET US CELEBRATE LIFE – வாழ்க்கையை கொண்டாடுவோம்" என்ற தலைப்பில் ரையாடி, அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் தலைப்புடன் தொடர்புடைய புத்துணர்வு மற்றும் ஊக்கமளிக்கும் செயல்பாடுகளை நடத்தினார்.

வள நபர் குழந்தைகள் நல அலுவலர் ஷிலோ அன்னிஸ், மாணவர்களிடம் மனநலம், உணர்வுகளை வெளிப்படுத்துதல், தன்னம்பிக்கை, நேர்மறை மாணவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற்றனர், மற்றும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் ஷெல்டர் டிரஸ்ட் பணியாளர்கள் கலந்து கொண்டு கொண்டனர். மாணவர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்றனர்.

# ஓச்சேரி அனைத்து வியாபாரிகள் நல சங்கம் சார்பில் அரசு பள்ளியில் காமராஜர் சிலை திறப்பு விழா

ராணிப்பேட்டை, செப்.14

ராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப் பாக்கம் அடுத்த ஓச்சேரி ஊராட்சியில் அமைந் துள்ளது ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி. இப்பள்ளியில் ஓச்சேரி அனைத்து வியா



பாரிகள் நல சங்கம் சார்பில், காமராஜர் கலையரங்கம்மற்றும்திருவுருவ சிலை திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சங்க தலைவர் எம்.ராஜசேகர் தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளர் வேல்முருகன், பொருளாளர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க செயலாளர் பி.டில்லி வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்ரமராஜாகலந்து கொண்டு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள, காமராஜர் கலையரங்கம் மற்றும் திருவுருவ சிலையை திறந்து வைத்தும், மாலை அணிவித்தும், மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அப்போது காமராஜர் ஆட்சி காலத்தில் கொண்டு வந்த திட்டங்கள் குறித்து மக்கள் மத்தியில் எடுத்துரைத்தார். இதனையடுத்து நலிவடைந்த குடு ம்பத்தினருக்கு 25கிலோ ஒரு சிப்பம் அரிசி, மற்றும் மளிகை பொருட்கள் ஆகியன வழங்கினார். இதில் வேலூர் மண்டலத் தலைவர் ஞானவேல், ராணிப்பேட்டை மாவட்ட தலைவர் சரவணன், பள்ளி தலைமை ஆசிரியர் சுகந்தமாலா, ஆசிரியர்கவிதா, உமாமகேஸ்வரி, உள்பட பலர் உடன் இருந்தனர்.

இறுதியாக சங்க பொருளாளர் ஷமியுல்லா நன்றி கூறினார்.



தமிழகமுதல்வர்ஜோசப்விஜய்ஆனவபேச்சைகண்டித்துதிண்டுக்கல்லில் முன்னாள்அமைச்சர்கள்ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணிஆகியோர்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## திருவண்ணாமலை ஆடுதொட்டி தெருவில் பரபரப்பு:

# "மெதுவாக செல்லுங்கள்" என அறிவுறுத்திய வெற்றிலை வியாபாரிக்கு அரிவாள் வெட்டு

## 25 வயது இளைஞர் மருத்துவமனையில் அனுமதி

திருவண்ணாமலை, செப். 14

திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆடுதொட்டி தெருவில், இருச்சக்கர வாகனத்தில் வேகமாக சென்றவர்களை மெதுவாக செல்லுமாறு அறிவுறுத்திய வெற்றிலை வியாபாரியை அரிவாளால் வெட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆடுதொட்டி தெருவைச் சேர்ந்த பாதுஷா (25), வெற்றிலை வியாபாரம் செய்து வருகிறார். இவர் சம்பவத்தன்று தனது வியாபார பணிகளை முடித்துவிட்டு ஆடுதொட்டி தெரு பகுதியில் சென்று கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது, அந்த வழியாக இருச்சக்கர வாகனத்தில் சிலர் அதிவேகமாக சென்றதாக தெரிகிறது. குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறும், ஆபத்தும்ஏற்படும்வகையில் வேகமாக செல்ல வேண்டாம் என்றும், வாகனத்தை மெதுவாக ஓட்டுமாறும் பாதுஷா அறிவுறுத்தியுள்ளார்.


இதனால் ஆத்திரமடைந்த அந்த நபர்கள் பாதுஷாவிடம் தகராறில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இருதரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், திடீரென அவர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து பாதுஷாவை சரமாரியாக தாக்கியதாக தெரிகிறது.

இந்த தாக்குதலில் பாதுஷாவுக்கு உடலில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. ரத்தக்காயங்களுடன் அவர் சம்பவ இடத்தில் சுருண்டு விழுந்தார். இதனை பார்த்த அப்பகுதி மக்கள் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்குஅனுப்பிவைத்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பாதுஷாவுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். அவரது உடல்நிலை குறித்து மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார்சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். மேலும், சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து, பாதுஷாவை தாக்கிய நபர்கள் யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவம் நடந்த ஆடுதொட்டி தெரு மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளையும் போலீசார் ஆய்வு செய்து வருவதாக கூறப்படுகிறது. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தலைமறைவாக இருந்தால், அவர்களை பிடிக்க தனிப்படை அமைத்து தேடும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிகிறது.

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இருச்சக்கர வாகனத்தில் மெதுவாக செல்லுமாறு அறிவுறுத்திய வெற்றிலை வியாபாரி மீது அரிவாளால் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் ஆடுதொட்டி தெரு பகுதியில் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



## திண்டுக்கல் அருகே

# மனைவியின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த கணவன் கைது

திண்டுக்கல் பாலகிருஷ்ணாபுரம், பாப்புலர் நகரை சேர்ந்த ஜெயசீலன்(42)இவரதுமனைவி காளீஸ்வரி(38) இந்நிலையில் குடும்ப பிரச்சனை காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை கணவர் ஜெயசீலன் மனைவி காளீஸ்வரியின் கழுத்தை அறுத்து கொலை செய்து தப்பி ஓடிவிட்டார்.

இது குறித்து மாவட்ட S.P.ஜெயக்குமார் உத்தரவின் பேரில் தாலுகா காவல் நிலைய (பொறுப்பு) ஆய்வாளர் சரவணன் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு தலைமறைவாக இருந்த கணவர் ஜெயசீலனை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

## செங்குன்றத்தில்

# இரு சக்கர வாகனம் மீது பின்னால் வந்த லாரி மோதிய விபத்தில் குழந்தைகள் கண் எதிரே தாய் உயிரிழப்பு

செங்குன்றம், செப்டம்பர் 14:

சோழவரத்தை சேர்ந்த காரனோடை நாராயணன் பேடு பெரியார் நகர் பகுதி சேர்ந்த பாஸ்கரன். இவர் மெக்கானிக்காக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி மோகனப்பிரியா (வயது 36), சென்னையில் உள்ள பிரபல நகைக்கடையில் வேலை பார்த்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பத்து மணி அளவில் மோகனப்பிரியா தனது மகள் ரித்திகா 8, மகன் சஞ்சய் 6 ஆகிய இரு குழந்தைகளை அழைத்து கொண்டு இரு சக்கர வாகனத்தில் சென்னை வடபழனியில் உள்ள உள்ள தாய் வீட்டிற்கு செல்லும் பொழுது, செங்குன்றம் அருகே உள்ள சோத்துப் பாக்கம் பாலவாயல் பைபாஸ் சாலை சிக்னல் சந்திப்பில் செல்லம் பொழுது இருசக்கர வாகனம் மீது பின்னால் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் இரு சக்கர வாகனத்தில் வந்த மோகனப்பிரியா மற்றும் குழந்தைகள் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். உடனே தகவல் அறிந்த 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றபோது அங்கு பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலே மோகனப்பிரியா இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

காயம் ஏற்பட்ட இரண்டு குழந்தைகளை சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து உள்ளனர்.

இதனை அடுத்து தகவல் அறிந்த செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல்துறையினர் சடலத்தை மீட்டு , பிரேத பரிசோதனைக்கு சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்கு பதிவு செய்து, தப்பி ஓடிய லாரி டிரைவரை தேடி வருகின்றனர்.

இதனிடையே செங்குன்றம் சோத்துப்பாக்



கம் பாலவாயல் பைபாஸ் சாலை சந்திப்பில் கனரக வாகனங்கள் போக்குவரத்தை முறைப்படுத்த வலியுறுத்தி, போக்குவரத்து போலீசார் சுழற்சி முறையில் பணியாற்ற வேண்டி பொதுமக்கள் வாகன ஓட்டிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய செங்குன்றம் போக்குவரத்து காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததை தொடர்ந்து பொதுமக்கள் கலைந்து சென்றனர். சாலை மறியல் போராட்டம் காரணமாக சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சுமார் 1 மணி நேரம் வாகனங்கள் ஊர்ந்து சென்றன.

இதனால் செங்குன்றம் பைபாஸ் சாலையில் பரபரப்பு ஏற்பட்டது.

## திண்டுக்கல் மாவட்டம், புனித ஆரோக்கிய மாதா தெருவின்

# பாதுகாவலியான புனித ஆரோக்கிய அன்னையின் 291வது ஆண்டுப் பெருவிழா

## திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் சி.சீனிவாசன் மின் பவனியை தொடங்கி வைத்தார்

திண்டுக்கல்மாவட்டம், புனித ஆரோக்கிய மாதா தெருவின் பாதுகாவலியான புனித ஆரோக்கிய அன்னையின் 291வது ஆண்டுப் பெருவி





ழாவை முன்னிட்டு,நம் மண்ணின் மைந்தர் கழகப் பொருளாளர்,

திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திண்டுக்கல் சி.சீனிவாசன், MA., MBA., அவர்கள் கலந்துகொண்டு மின்பவனியை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட மீனவரணி செயலாளர், மாநகராட்சியின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.C.S.ராஜமோகன்BA.,MC., அவர்கள்,பகுதி கழகச் செயலாளர்கள்: திரு.மோகன், திரு.சுப்பிரமணி, திரு. V.T. ராஜன், வார்டு கழகச் செயலாளர்கள்: திரு.செல்வகுமார், திரு.முருகன், திரு.காமராஜ், திரு.சேகர், ExMC., திரு.பரமேஸ்வரன், மற்றும் மாவட்ட பிரதிநிதி திரு.யூஜீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில்

# ஒப்பந்த அடிப்படையில் செவிலியர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை, செப். 14

திருவண்ணாமலை மாவட்டத்தில் காலியாக உள்ள செவிலியர் (Staff Nurse) பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



மாவட்ட நலவாழ்வு சங்கம் மற்றும் தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் இந்த பணியிடம் நிரப்பப்பட உள்ளது. ஒப்பந்தம்/ தற்காலிக செவிலியர் பணிக்கு மாதம் ரூ.21,000 ஊதியம் வழங்கப்படும். கல்வித்தகுதி: அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் கல்லூரியில் GNM/B.Sc. Nursing படிப்பை முடித்திருக்க வேண்டும். இந்திய செவிலியர் குழுமத்தால் (Indian Nursing Council) அங்கீகரிக்கப் பட்டநிறுவனமாகஇருக்க வேண்டும். மேலும், தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் செல்லுபடியாகும் பதிவு பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி சான்று, மதிப்பெண் சான்று, சாதிச்சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

இந்த பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது. எந்த ஒரு காலத்திலும் பணி நிரந்தரம் செய்யப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை செயல்பாட்டு செயலாளர்/மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட நலவாழ்வு சங்கம் (District Health Society), மாவட்ட சுகாதார அலுவலகம், பழைய அரசு மருத்துவமனை வளாகம், செங்கம் சாலை, திருவண்ணாமலை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.

மேற்கண்ட பணியிடத்தை அவசரமாக நிரப்ப வேண்டியுள்ளதால், தகுதியானவர்கள் 25.09.2026 அன்று மாலை 5 மணிக்குள்விண்ணப்பிக்கவேண்டும். அதன்பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.விண்ணப்பப் படிவத்தை tiruvannamalai.nic.in என்ற மாவட்ட நிர்வாக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



பழனி சண்முக நதியில் இன்று வீ த லீடர்ஸ் மற்றும் பொதுமக்கள் அனைத்து அமைப்பினர்சார்பாக, சண்முகநதியை சுத்தம்செய்யும்பணியில் ஈடுபட்டு உள்ளனர்

# கே ஜி எஃப் பெத்தமங்கலத்தில் மோகன் கிருஷ்ணாவின் விநாயகர் விழா; இளைஞர்களுக்கு இலவச சிலைகள் வழங்கல்

## தனி நிகழ்வில் எம்.எல்.ஏ. மீது விமர்சனம்

கே.ஜி.எஃப். பெத்தமங்கலத்தில் கௌரி கணேஷ் திருவிழாவை யொட்டி, இளைஞர்களுக்கு திரு. வி. மோகன் கிருஷ்ணா தனது சார்பில் இலவசமாக விநாயகர் சிலைகளை வழங்கினார்.

பெத்தமங்கலம் கிராமத்தில் கியாசம்பள்ளி சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ லட்சுமி வெங்கடேஸ்வர கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள், விநாயகர் சங்க நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் தலைவர்கள்கலந்துகொண்டனர்.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, இளைஞர்கள் தங்கள்

பகுதிகளில் விநாயகர் சிலைகளைபிரதிஷ்டை செய்து வழிபாடு நடத்துவதற்காக, மோகன் கிருஷ்ணா அவர்களால் சிலைகள் ஏற்பாடு செய்யப்பட்டு, இளைஞர்களுக்கு இலவசமாக நேரடியாக வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வில் பணமாகவோ அல்லது நிதியுதவியாகவோ எந்தத் தொகையும் வழங்கப்படவில்லை. விநாயகர் சிலைகள் மட்டுமே இலவசமாக வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, மோகன் கிருஷ்ணா விநாயகர் சிலையை வணங்கி, சிறப்பு பூஜையில் கலந்து கொண்டார். விழாவை பக்தியுடனும் அமைதியாகவும், சமூக நல்லிணக்கத்துடனும் கொண்டாட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இளைஞர்களின் பங்களிப்புடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், விநாயகர் விழாவின் ஏற்பாடுகள் மற்றும் சமூக நல்லிணக்கம் குறித்தும் கருத்துகள் பரிமாறப் பட்டன.

அரசியல் விமர்சனம் – தனிப்பகுதி

இதனிடையே, தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரின் செயல்பாடுகள் குறித்துதிரு.வி.மோகன் கிருஷ்ணா தனது விமர்சனங்களைதனியாக முன்வைத்தார்.

தொகுதி மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், இளைஞர்களின் எதிர்காலம் மற்றும் தொகுதியின் வளர்ச்சி தொடர்பான பல்வேறு கருத்துகளையும் அவர் முன்வைத்ததாக கூறப்படுகிறது.

மோகன் கிருஷ்ணா முன்வைத்த இந்த விமர்சனங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தரப்பில் இருந்து பதில் அல்லது விளக்கம் வெளியாகியுள்ளதா என்பது குறித்த தகவல் தற்போது இல்லை. இவ்வாறு, பெத்தமங்கலத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஒருபுறம் இளைஞர்களுக்கு இலவசமாகவிநாயகர்சிலைகள் வழங்கப்பட்ட நிலையில், மற்றொரு தனிப்பகுதியில் தொகுதி அரசியல் தொடர்பான விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டன.

விநாயகர் விழாவை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, இளைஞர்களின் பங்கேற்பு மற்றும் உள்ளூர் அரசியல் கருத்துகள்காரணமாக கவனம் பெற்றுள்ளது.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



திருவள்ளூர் மாவட்டம். பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம். குத்தம்பாக்கம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித திட்டத்தில் நாற்றாங்கால் பண்ணையில் மரக் கன்றுகள் பராமரிப்பு பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மை செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குந/இணை இயக்குநர் கே.இந்து பாலா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் கவிதா, செயற்பொறியாளர் (ஊ.வ) தணிகாச்சலம், உதவி இயக்குநர் (ஊராட்சி (ம) தணிக்கை (மத்தியம்)) யுவராஜ்,பூவிருந்தவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர்(வ.ஊ), சுந்தர்ராஜன்(கி.ஊ) மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# "116 நாள் ஆட்சியில் 200 கொலைகள்; கேள்விகளுக்கு பதிலளிக்காமல் மிசா பற்றி பேசுகிறார் விஜய்"

## எ.வ.வேலு கடும் குற்றச்சாட்டு

திருவண்ணாமலை, செப். 14

மைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியில் சட்டம்ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், 116 நாள் ஆட்சியில் 200 கொலைகள் உள்ளிட்ட 550 குற்றச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு குற்றம்சாட்டினார்.

முதலமைச்சர் விஜயின் சட்டமன்றப் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து, திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைந்த திமுக சார்பில் திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட அண்ணா சிலை அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமை வகித்தார்.

முன்னாள் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன்எம்.பி.,மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் முதலமைச்சர் விஜயின் பேச்சைக்கண்டித்து திமுகவினர் கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் எ.வ.வேலு கூறியதாவது:

"மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கும், ஜனநாயக நெறிமுறைகளை நிலைநாட்டுவதற்கும் தான் சட்டமன்றம் உள்ளது. எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு முதலமைச்சர் நேரடியாக பதிலளிக்க வேண்டும். கடந்த காலங்களில் கருணாநிதி, ஜெயலலிதா, மு.க.ஸ்டாலின் ஆகியோர் முதலமைச்ச ர்களாக இருந்தபோது, அமைச்சர்களால் பதிலளிக்க முடியாத கேள்விகளுக்கு முதலமை ச்சர்களே பதில் அளித்துள்ளனர்.

ஆனால் தற்போது முதலமைச்சர் விஜய் வகித்து வரும் காவல் துறை மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு முதலமைச்சர் நேரடியாக பதிலளிக்காமல்அமைச்சர்களை எழுந்து பேசச் செய்கிறார். அவர்களின் பதில்களும் கேள்விகளுக்கு தொடர்பில்லாத வகையில் உள்ளன.

த.வெ.க. ஆட்சியின் முதல் 116 நாட்களில் 550 குற்றச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும்,அதில்200கொலைகள், 8 காவல் நிலைய மரணங்கள், 10 ஆணவப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பிய போது, முதலமைச்சர் விஜய் நேரடியாக பதிலளிக்காமல் மிசா குறித்து பேசுகிறார்.

மிசா காலத்தில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் சிறையில் கடுமையாக தாக்கப்பட்டார். அவருடன் இருந்த சிட்டிபாபு அந்தத்தாக்குதலைத் தடுக்க முயன்றபோது காவல்துறையினரால் தாக்கப்பட்டு சிறையிலேயே உயிரிழந்தார்.

மிசா காலத்தில் நடைபெற்ற கொடுமைகள் குறித்து ஆணையத்திடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்றைய மக்கள் பிரச்சினைகளுக்கான கேள்விகளுக்கு பதிலளிக்காமல் கடந்த கால சம்பவங்களை பேசுவது பொருத்தமற்றது.





தற்போது விலைவாசி உயர்வு, சட்டம்ஒழுங்கு பிரச்சினை, விவசாயக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

அவைகுறித்துகேள்வி எழுப்பினால் உரிய பதில் அளிக்க முடியாத நிலை உள்ளது.

அண்ணாவை கொள்கைத் தலைவராக ஏற்றுக்கொண்டதாக முதலமைச்சர் விஜய் கூறுகிறார். ஆனால் அண்ணாவின் பிறந்தநாளான செப்டம்பர் 15 ஆம் தேதி அவருக்கு உரிய மரியாதை செலுத்துவதை விடுத்து வெளிநாடு சென்றுள்ளார். திரைப்படத்தில் எழுதிக் கொடுக்கப்படும் வசனங்களைப் பேசுவதுபோல் சட்டமன்றத்திலும் பேசுகிறார்; கூறியவற்றை செயல்படுத்துவதில்லை.

திமுகவைப் பற்றி பேசுவதற்கு அமைச்சர் நிர்மல் குமாருக்கு தகுதி இல்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள்த.வெ.க.வுக்கு வாக்களித்துள்ளனர். இனி நடைபெற உள்ள இடைத்தேர்தலில் மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள்.

திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் குறித்து இதுவரை உரிய ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படவில்லை. இதற்கும் த.வெ.க. அரசு 'ரீல்ஸ்' மட்டுமே போடும்.பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச்செயலகம்அமைப்பதற்காக திமுக ஆட்சியில்இடம்ஆய்வு செய்யப்பட்டபோது, அங்கு ஏழு மீனவ கிராமங்கள் இருந்தன. சுனாமி காலத்திலும் அந்த மக்கள் அப்பகுதியில்தான் வசித்து வந்தனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே அந்தத் திட்டத்தை கைவிட்டோம்.

திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 18 ஊராட்சிகளும் அப்போதைய மக்கள் பிரதிநிதிகளின் சம்மதத்துடன்தான் இணைக்கப்பட்டன. திமுக ஆட்சியில் தன்னிச்சையாக எந்த ஊராட்சியும் மாநகராட்சியுடன் இணைக்கப்படவில்லை. தற்போது இதை அரசியலாக்கி போராட்டம் நடத்துகின்றனர். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு இனிமேலாவது முதலமைச்சர் விஜய் நேரடியாக பதில் அளிக்க வேண்டும். எங்களது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இது ஒரு அடையாளப் போராட்டம் மட்டுமே. ஆட்சியாளர்கள் தங்களைத் திருத்திக் கொள்ளவில்லை என்றால்திமுகஅடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்லும்" என எச்சரித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன். முத்து, ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், பிரியா ப.விஜயரங்கன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒ.ஜோதி, கே.வி.சேகரன், கோ.எதிரொலி மணியன், மாநில தொ.மு.ச. பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், தமிழ்நாடு அனைத்து அமைப்பு சாரா தொமுச மாநில பிரச்சார செயலாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்டி.வி.எம்.நேரு, கு.கணேஷ், சி.ராம்காந்த், டாக்டர் பிரவீன் ஸ்ரீதரன், நகர செயலாளர்கள் வ.மணிமாறன், கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், கோ.தனசேகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மேலும், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA